# தமிழ் நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், சென்னை-8

## காவல் சார்பு ஆய்வாளர்கள் [தாலுகா மற்றும் ஆயுதப்படை (ஆண், பெண் மற்றும் திருநங்கை)] பதவிகளுக்கான நேரடி தேர்வு - 2022

## அறிவிக்கை (எண்-01/2022)

நாள்: 08.03.2022

1. தமிழ் நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், காவல் சார்பு ஆய்வாளர்கள் (தாலுகா மற்றும் ஆயுதப்படை) பதவிகளுக்கான நேரடி தேர்வு 2022-க்கு (இந்திய குடியுரிமை உடையர்கள் மட்டும்) விண்ணப்பதாரர்களிடமிருந்து இணைய வழி விண்ணப்பங்களை (Online Application) வரவேற்கிறது. ஊதிய விகிதம் ரூ.36900 - 116600.

**இத்தேர்வுக்கான முக்கிய நாட்கள்**

| | | | |
|---|---|---|---|
| i | அறிவிக்கை நாள் | | 08.03.2022 |
| ii | இணைய வழி விண்ணப்பம் துவங்கும் நாள் | | 08.03.2022 |
| iii | இணைய வழி விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் | | 07.04.2022 |
| iv | எழுத்துத் தேர்வு நடைபெறும் நாள் | பொது விண்ணப்பதாரர்கள் | வரும் ஜீன் மாதம் 2022-ல் நடைபெறும். சரியான நாள் பின்னர் அறிவிக்கப்படும். |
| | | 20% துறை விண்ணப்பதாரர்கள் | |

2. காலிப்பணியிடங்கள்: 444

| பதவியின் பெயர் | பணி | காலிப்பணியிடங்கள் | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | பொது/ஆண்கள் | பெண்கள் மற்றும் திருநங்கைகள் | |
| காவல் சார்பு ஆய்வாளர்கள் (தாலுகா) | தமிழ் நாடு காவல் சார் நிலைப் பணி | 279 | 120 | 399 |
| காவல் சார்பு ஆய்வாளர்கள் (ஆயுதப்படை) | | 32 | 13 | 45 |
| | மொத்தம் | 311 | 133 | 444 |

3. ஒதுக்கீடு:

| ஒதுக்கீட்டு விவரம் | மொத்தக் காலிப்பணியிடங்களில் ஒதுக்கீட்டு சதவீதம் | தகுதிகள் |
|---|---|---|
| காவல்துறைக்கான ஒதுக்கீடு | 20% | தமிழ் நாடு காவல் சார் நிலை பணிகள் மற்றும் தமிழ் நாடு சிறப்பு காவல் சார் நிலை பணி விதிகளில், விதி 14 உள்ள தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும். |
| விளையாட்டிற்கான ஒதுக்கீடு | 10% | அங்கீகரிக்கப்பட்ட 16 விளையாட்டுப் போட்டிகளில் தேசிய, தமிழகத்தின் சார்பாக மற்றும் தமிழக பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெற்றவர்கள். |

குறிப்பு:
- i. காவல்துறை ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிப்பவர்களுக்கு, முதன்மை எழுத்துத் தேர்வு தனியாக நடைபெறும். காவல்துறையைச் சார்ந்த விண்ணப்பதாரர்கள் பொது ஒதுக்கீட்டிற்கான தகுதிகள் பெற்றிருப்பின் பொதுப் பிரிவுக்கான தேர்வு மற்றும் காவல்துறைக்கான தேர்வுகளுக்கும் விண்ணப்பிக்கலாம்.
- ii. சிறப்பு ஒதுக்கீட்டில் (காவல்துறைக்கான ஒதுக்கீடு மற்றும் விளையாட்டிற்கான ஒதுக்கீடு) தேர்வு செய்திட விண்ணப்பதாரர்கள் இல்லாவிடில், அந்தக் காலிப்பணியிடங்கள், பொது ஒதுக்கீட்டிற்கு மாற்றம் செய்யப்பட்டு வகுப்பு வாரியாகத் தேர்வு செய்யப்படுவார்கள்.
- iii. ஒவ்வொரு ஒதுக்கீட்டினுள்ளும், தற்போது நடைமுறையிலுள்ள அரசு விதிகளின் அடிப்படையில் வகுப்புவாரி இட ஒதுக்கீடு பின்பற்றப்படும்.

4. தமிழ் வழியில் பயின்றவர்களுக்கான முன்னுரிமை (PSTM): பொது விண்ணப்பதாரர்கள் தமிழ் பயிற்று மொழியில் 1ம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு, 11வது மற்றும் 12வது மற்றும் முதல் இளங்கலைப்பட்டம் வரை தமிழ்வழியில் பயின்றிருந்தால் தேர்வின் ஒவ்வொரு நிலையிலும் 20% முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கப்படும்.

5. வயது: விண்ணப்பதாரர்கள் 01.07.2022 அன்று 20 வயது நிறைவு பெற்றவராகவும் மற்றும் 30 வயது நிறைவு பெறாதவராகவும் இருக்க வேண்டும். சில பிரிவினருக்கு வயது உச்சவரம்புத் தளர்வு கீழ்காணுமாறு பின்பற்றப்படும்.

| வகுப்புவாரி பிரிவு | உச்ச வயது வரம்பு |
|---|---|
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்), மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் | 32 வயது |
| ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்), பழங்குடியினர் மற்றும் திருநங்கைகள் | 35 வயது |
| ஆதரவற்ற விதவை | 37 வயது |
| முன்னாள் இராணுவத்தினர் / முன்னாள் மத்திய துணை இராணுவப் படையிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்க வேண்டும். (அறிவிக்கை வெளியான மூன்று ஆண்டுகளுக்குள் அதாவது பணியிலிருந்து 08.03.2019-க்குப் பின்னர் விடுவிக்கப்பட்டிருக்க வேண்டும்) மற்றும் இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசித் தேதிக்குப் பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வு பெறவுள்ள இராணுவ மற்றும் மத்திய துணை இராணுவப் படைவீரர்கள். | 47 வயது |
| துறை ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கும் துறை விண்ணப்பதாரர்கள் | 47 வயது |

குறிப்பு: காவல்துறை ஒதுக்கீட்டு விண்ணப்பதாரர்கள், பொது ஒதுக்கீட்டின் கீழும் விண்ணப்பித்தால், பொது ஒதுக்கீட்டு விண்ணப்பதாரர்களுக்கான வயது தகுதியினைப் பெற்றவராக இருக்க வேண்டும்.

6. கல்வித் தகுதிகள்: விண்ணப்பதாரர்கள் பல்கலைக்கழக மானிய குழு அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்திலிருந்து அல்லது கல்வி நிறுவனங்களிலிருந்து 10+2+3/4/5 என்ற முறையில் பெற்ற இளங்கலைப் பட்டம் அல்லது 10+3+2 என்ற முறையில் பட்டயப்படிப்பு படித்த பின்னர் இளங்கலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும். ஆனால் திறந்தவெளி பல்கலைகழகம் மூலம் நேரடியாக இளங்கலைப் பட்டம் பெற்றவர்கள், 10+2+3 என்ற முறையில் இளங்கலைப் பட்டம் பெறாமலிருந்தால், விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்களாவர்.

7. இடஒதுக்கீடு: வகுப்பு வாரி இடஒதுக்கீடு மற்றும் பெண்களுக்கான இடஒதுக்கீடு நடைமுறையில் உள்ள விதிகளின்படி பின்பற்றப்படும். தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ் பெற்றவர்கள் மட்டுமே வகுப்புவாரி ஒதுக்கீட்டில் பரிசிலீக்கப்படுவார்கள்.

| | |
|---|---|
| பொதுப் பிரிவினர் | 31% |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 26.5% |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) | 3.5% |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் | 20% |
| ஆதிதிராவிட வகுப்பினர் | 15% |
| ஆதிதிராவிட (அருந்ததியர்) வகுப்பினர் | 3% |
| பழங்குடியின வகுப்பினர் | 1% |

(வகுப்புவாரி இடஒதுக்கீடு சம்மந்தமாக தமிழக அரசின் சட்ட எண் 8, 2021ன் படி தமிழக அரசால் மேல்முறையீடு செய்யப்பட்ட வழக்கு மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையிலிருந்து வருகிறது. ஆகையால், உச்ச நீதிமன்ற இறுதி தீர்ப்புக்கு ஏற்ப வகுப்புவாரி இடஒதுக்கீடு பின்பற்றப்படும்.)

8. தேர்வு நிலைகள்:

| வ. எண். | தேர்வு நிலைகள் | பொது ஒதுக்கீட்டு தேர்வு | துறை ஒதுக்கீட்டு தேர்வு |
|---|---|---|---|
| 1. | எழுத்துத் தேர்வு | பிரிவு-I தமிழ் மொழித் தகுதித்தேர்வு, கொள்குறி வகைத்தாள் - 100 மதிப்பெண்கள் | |
| | | பிரிவு- II பொது அறிவு மற்றும் உளவியல் தேர்வு கொள்குறி வகைத்தாள் - 70 மதிப்பெண்கள் | பிரிவு-II பொது அறிவு, உளவியல், சட்டம் மற்றும் காவல் நிர்வாகம் தொடர்பான பாடங்களுக்கான தேர்வு.<br>கொள்குறி வகைத்தாள் - 85 மதிப்பெண்கள் |
| 2. | சான்றிதழ்கள் சரிபார்த்தல் மற்றும் உடற்தகுதித் தேர்வுகள் | உடற்கூறு அளத்தல் மற்றும் உடற்தகுதித் தேர்வு ஆகியன தகுதித் தேர்வுகளே.<br><br>உடற்திறன் போட்டிகளுக்கான அதிகபட்ச மதிப்பெண்கள் - 15 | துறை ஒதுக்கீட்டிற்கான விண்ணப்பதாரர்களுக்கு உடற்கூறு அளத்தல் மற்றும் உடற்திறன் போட்டிகளில் கலந்து கொள்வதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.<br>இவர்களுக்கு உடற்தகுதித் தேர்வு உண்டு. இது தகுதித் தேர்வேயாகும். |
| 3. | நேர்காணல் தேர்வு | 10 மதிப்பெண்கள் | 10 மதிப்பெண்கள் |
| 4. | சிறப்பு மதிப்பெண்கள் | 5 மதிப்பெண்கள் (தேசிய மாணவர் படை/ நாட்டு நலப் பணித்திட்டம்/விளையாட்டுகள்) | 5 மதிப்பெண்கள் (தேசிய காவல் பணித்திறன் போட்டிகளில் பதக்கம் பெற்றிருக்க வேண்டும்). |
| | மொத்தம் | **100 மதிப்பெண்கள்** | **100 மதிப்பெண்கள்** |

தமிழ் மொழித் தகுதித் தேர்வில் விண்ணப்பதாரர்கள் குறைந்தபட்சம் 40 மதிப்பெண்கள் (40%) பெற்று தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களுடைய முதன்மை எழுத்துத் தேர்வின் OMR விடைத்தாள்கள் மட்டுமே மதிப்பீடு செய்யப்படும்.

20% துறை சார்ந்த விண்ணப்பதாரர்களுக்கும் பொது ஒதுக்கீட்டில் விண்ணப்பிப்பவர்களுக்கும் தமிழ் மொழித் தகுதித்தேர்வு ஒரே தேர்வாக நடத்தப்படும்.

பொது மற்றும் துறை சார்ந்த ஒதுக்கீட்டுக்கும் விண்ணப்பம் செய்த விண்ணப்பதாரர்கள் தமிழ் மொழித்தகுதித் தேர்வினை ஒருமுறை மட்டுமே எழுத வேண்டும்.

எழுத்துத் தேர்வில் தகுதி மதிப்பெண்ணாக பொது விண்ணப்பதாரர்கள் குறைந்தபட்சம் 25 மதிப்பெண்களும், துறை விண்ணப்பதாரர்கள் 30 மதிப்பெண்களும் பெறவேண்டும். இருப்பினும், அடுத்த கட்டத் தேர்வான அசல் சான்றிதழ்கள் சரிபார்த்தல், உடற்கூறு அளத்தல், உடற்தகுதித் தேர்வு மற்றும் உடற்திறன் போட்டிகளுக்கு மொத்தக் காலிப்பணியிட எண்ணிக்கையில் 1:5 என்ற விகிதாச்சாரப்படி விண்ணப்பதாரர்கள் மட்டுமே அழைக்கப்படுவார்கள். இதே போன்று நேர்காணலுக்கு, மொத்த காலிப்பணியிடங்களின் எண்ணிக்கையில் 1:2 என்ற விகிதாச்சாரப்படி விண்ணப்பதாரர்கள் அழைக்கப்படுவார்கள்.

9. எழுத்துத் தேர்வு மையம்: எழுத்துத் தேர்வுக்கான அழைப்புக் கடித்தில் எழுத்துத் தேர்வு மைய விவரம் தெரிவிக்கப்படும். இவ்வாரியத்திற்கு எழுத்துத் தேர்வு மையங்களை கூட்டவோ, குறைக்கவோ அல்லது ஒரு விண்ணப்பதாரரை பிற மையத்திற்கு நிர்வாக காரணத்தினால் மாற்றவும் உரிமை உண்டு.

10. தேர்வுக் கட்டணம்: விண்ணப்பதாரர்கள் தேர்வுக் கட்டணமாக ரூ.500/-ஐ செலுத்த வேண்டும். பொதுப்பிரிவு மற்றும் துறைக்கான ஒதுக்கீடு இரண்டிலும் பங்குபெற விண்ணப்பித்தால் தேர்வுக் கட்டணமாக ரூ.1000/-ஐ செலுத்த வேண்டும். தேர்வுக் கட்டணத்தை இணையதள வழி (இணையதள வங்கி / வங்கி கடன் அட்டை/வங்கி பற்று அட்டை) மற்றும் இணையமில்லா வழியில் செலுத்துச் சீட்டு மூலம் SBI வங்கியில் செலுத்தலாம்.

11. இணையவழி விண்ணப்பம்: விண்ணப்பதாரர்கள் இவ்வாரிய www.tnusrb.tn.gov.in இணையதளத்தின் மூலமாக மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். ஏனைய இதர வழிகளில் விண்ணப்பித்தால் அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்படும். எழுத்துத் தேர்வுக்கான அழைப்புக் கடிதத்தை இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். தபால் மூலமாக அழைப்புக் கடிதம் அனுப்பப்படமாட்டாது.

12. தற்காலிகத் தெரிவு: நேர்காணல் தேர்விற்குப் பின்னர் விண்ணப்பதாரர்கள், எழுத்துத்தேர்வு, உடல்திறன் தேர்வு, நேர்காணல் மற்றும் சிறப்பு சான்றிதழ்களுக்குப் பெற்ற மொத்த மதிப்பெண்கள் மற்றும் வகுப்புவாரி விகிதாச்சார அடிப்படையிலும், வகுப்புவாரி சுழற்சி முறையிலும் தாலுகா மற்றும் ஆயுதப்படைக்கு காவல் சார்பு ஆய்வாளராகத் தற்காலிகமாகத் தெரிவு செய்யப்படுவார்கள்.

13. மருத்துவப் பரிசோதனை மற்றும் முந்தைய பழக்கவழக்கங்கள் மற்றும் குணநலன்கள் குறித்த விசாரணை: காவல் சார்பு ஆய்வாளர் பதவிக்கு தற்காலிகமாகத் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் மருத்துவப் பரிசோதனை மற்றும் முந்தைய பழக்கவழக்கங்கள் மற்றும் குணநலன்கள் குறித்த விசாரணைக்கும் உட்படுத்தப்படுவார்கள்.

14. இத்தேர்விற்கான கூடுதல் தகவல்கள், பாடத்திட்டங்கள், எழுத்துத்தேர்விற்கான மாதிரி வினாத்தாள்கள், உடற்கூறு அளத்தல், உடற்தகுதித் தேர்வு மற்றும் உடற்திறன் போட்டிகளுக்கான விதிமுறைகள் ஆகியவகை தகவல் சிற்றேட்டில் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் இவ்வாரிய இணையதளமான **www.tnusrb.tn.gov.in** –லிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

15. விண்ணப்பதாரர்கள் இணையவழி விண்ணப்பத்தினை, சமர்ப்பிப்பதற்கு முன்னர், இவ்வாரிய இணையதளத்திலுள்ள தகவல் சிற்றேட்டினை படித்து அனைத்து விவரங்களையும் அறிந்து கொள்ள வேண்டும்.

உறுப்பினர் செயலாளர்,
தமிழ் நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம்,
சென்னை-08.